# பச்சைப் புலிகளினுல் ஐநூறு தமிழர் கடத்தல்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குள் 500க்கும் அதிகமான தமிழர்கள் பச்சைப்புலிகளினுல் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இராணுவமுகாமகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்களா அல்லது கொல்லப்பட்டார்களா என்பது பற்றி அறியமுடியாதுள்ளதாக அங்கிருந்துவந்த ஒருவர் தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர்: 33 | மாசி 21 | ஷஃபான் 17 | இதழ்: 24

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 6-3-1991


## தகவல் தருவோருக்கு 10 லட்லம் ரூபா 'சன்மானம்

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவின் கொலைக்குக் காரணமான கொலையாளிகள் தொடர்பான தகவல் கொடுப்போருக்கு பத்துலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலால் இராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கடுமை (4-ம் பக்கம் பார்க்க)

# ★ ஈழத் தமிழரின் பெரும்பான்மை ஆதரவு விடுதலைப்புலிகளுக்கு இருப்பதனை இந்தியா ஏற்றுக்கொள்கிறது

## இந்திய வெளியுறவுச் செயலர் துபே

(புதுடில்லி)

**"இலங்கைத் தமிழரின் பெரும்பான்மை ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது என்பதை இந்தியா ஏற்றுக்கொள்கிறது" என்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. முக்குளி துபே தெரிவித்துள்ளார்.**

புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை-இந்திய உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றின் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

திரு. துபே அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இலங்கையில் தனி நாடு கோரிப் போராடும் தமிழர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினுல், இலங்கை அரசு தமிழருக்கு அதிக அளவிலான தன்னுட்சி உரிமைகளை வழங்க வேண்டுமென இந்தியா இலங்கையிடம் தெரிவித்துள்ளது."

முன்னுள் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. வி. கி. சுக்லாவுடன் இலங்கை சென்று திரும்பிய திரு. துபே, இலங்கைப் பிரச்சனைக்கு அமைதிப் பேச்சுவார்த்தை மூலமே நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்றும் கூறினுர். (ரி.

## முரசுமோட்டை — விமானத் தாக்குதலில் ஒருவர் பலி; அறுவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் - முரசுமோட்டை 2ம் கட்டையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் வயோதிபப் பெண் ஒருவர் பலியானுர். ஆறுபேர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதத்திற்குள்ளாகின.

சதாசிவம் தங்கம்மா (வயது 58) முரசுமோட்டை என்பவரே இச்சம்பவத்தில் இறந்த (4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், சீநோர் மினி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் பகல் 10-45 மணிக்கு ஊர்மனைகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (வி)

## கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து தடுத்துவைப்பு

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவின் கொலையை அடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிருர்கள்.

விசாரணையின் பின் இவர்கள் விடுதலைசெய்யப்படுகிருர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தபோதிலும் இதுவரை எவரும் விடுதலை செய்யப்படவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

## டீசல் நிரப்ப அனுமதி

(வவுனியா)

கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கு வவுனியாவில் டீசல் நிரப்புவதற்கான அனுமதியை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

சாரதிகள், கூட்டுறவுச் சங்கத்தின் அத்தாட்சிக் கடிதங்களைச் சமர்ப்பித்து, வவுனியாவில் டீசல் நிரப்பிக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## பாராளுமன்றத்தை — தொடர்ந்து பகிஷ்கரிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றத்தைத் தொடர்ச்சியாக பகிஷ்கரிக்கப் போவதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

கடந்த 21-ம் திகதி வாசுதேவ பாராளுமன்றில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவை தெரிவித்துள்ளன. (க)

## இராணுவத்திற்கு தமிழ் குழுவினர் உதவி

(கொழும்பு)

கொழும்பில் தங்கியிருக்கும் இளைஞர்களை கைதுசெய்வதற்கு இராணுவத்துக்கு உதவியாக தமிழ்க்குழு ஒன்று (4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலில் ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினுல் ஐவர் படுகாயமடைந்தனர்.

சரம்பன், நாரந்தனை, புளியங்கூடல், தம்பாட்டிபோன்ற கிராமங்களின் குடியிருப்புகளை நோக்கியே இந்த 'ஷெல்' தாக்குதல் நடத்தப்பட்டது. வி. நீக்கிலஸ் (30 வயது), (4ம் பக்கம் பார்க்க)

## யாழ் குடாவில் நேற்றும் பயங்கர விமான குண்டுவீச்சு மூவர் பலி; பலர் காயம்

(நமது நிருபர்கள்)

யாழ். ஒட்டுமடம், நல்லூர், கலட்டி அச்சுவேலி ஆகிய இடங்களில் நேற்று நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சினுல் மூவர் பலியானுர்கள். பதின்மூன்றுபேர் காயமடைந்தனர். பதினேழு வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 8-15 மணியளவில் ஒட்டுமடம் பகுதியில் நடைபெற்ற பொம்மர் (4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்வதற்கு லொறிகளுக்கு அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு உணவுப்பொருள்களை எடுத்துவரச்சென்ற 410 லொறிகள் வவுனியாவிலும் பூநகரியிலும் தரித்துநிற்கின்றன.

வவுனியா பொறுப்பதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அவசர உத்தரவின் பேரில் எந்த வாகனத்தையும் வடபகுதியிலிருந்து கொழும்பு செல்ல அனுமதிக்கவேண்டாமெனப் பணிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## காரைநகர் கடலில் கடற்படை நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா கடற்படையினரின் நடமாட்டம் காணப்பட்டதாகத் தெரி (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கொம்பியூட்டர்

கொம்பியூட்டர் Programming in Basic Language 4 மாதங்கள். ஆரம்பம்: 12-03-91. I. A. B. (லண்டன்), Shorthand & Typing (பிற்மன்ஸ்) வகுப்புகள் நடைபெறுகின்றன. School of Business Administration, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4409)

### வேப்பெண்ணெய்

வீட்டில் ஒளி பெற நுளம்பினை விரட்டிட மருத்துவ தேவைக்குச் சுத்தமான வேப்பெண்ணெய் ப. நோ. கூ. சங்கங்களிலும் கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ 1129)


## பழைய இடத்தில் உப தபாலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி வீதி ரயில் நிலையச் சந்திக்கருகில் உப-தபால் நிலையம் வழமைபோல் பழைய இடத்தில் இயங்கிவருகிறது. மணி ஓடர்கள், தபால் கட்டளைகள். அடிதங்கள் ஏற்றுக்கொள்ளும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (59)

## ஆசிரியர் பற்றாக்குறை

(பருத்தித்துறை)

செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 9 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்துள்ள பெற்றோர்கள் இப்பாடசாலையின் ஆசிரியர்பற்றுக்குறையை நீக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கல்வித் திணைக்களத்தைக் கோரியுள்ளனர். (52)

## சனசமூக நிலைய ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கிலுள்ள ஒன்பது சனசமூக நிலையங்களும் கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் திரு. மு. பத்மநாதசிவம் தலைமையில் ஒன்றுகூடி அராலி வடக்கு கிராமத்தின் பொதுப்பணிக்கு என்று "அராலி வடக்கு சனசமூக நிலையங்கள் ஒன்றியம்" ஒன்றைப் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இவ்வொன்றிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்; கே. ரவிக்கினஜெயம், உப தலைவர்: எம். யோகேந்திரன், செயலாளர். கே. செல்வநாயகம். உப செயலாளர்: ரி. சுப்பிரமணியம், பொருளாளர்: ஏ. இராசலிங்கம்.

# கோட்டைக்காடு, பொன்னாலை மாதிரி கிராமங்களாக தெரிவு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கோட்டைக்காடு, பொன்னாலை ஆகிய 2 கிராமங்களும் மாதிரிக்கிராமங்களாக தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண அரசின் திட்டமிடல் இளைஞர் விவகார மனிதவள அமைச்சினாலேயே இந்த 2 கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொன்னாலை, கோட்டைக்காடு ஆகிய பின்தங்கிய 2 கிராமங்களையும் உதவி அரசாங்க அதிபர் திரு. த. வைத்திலிங்கம் தெரிவு செய்துள்ளார். (137)

## யாழ். வைத்தியசாலைக்கு புதிய எக்ஸ்ரே கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிதாக எக்ஸ்ரே இயந்திரம் வெகு விரைவில் கொழும்பிலிருந்து வரவிருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கென ஒதுக்கப்பட்ட புதிய எக்ஸ்ரே இயந்திரம் தற்போது கொழும்பிலுள்ள உயிரியல் வைத்திய உபகரணங்கள் களஞ்சியசாலையில் இருக்கிறது.

மேற்படி எக்ஸ்ரே இயந்திரத்தை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஸ்பா சண்முகம் ஈடுபட்டுவருகிறார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் எக்ஸ்ரே இயந்திரங்கள் நான்கு இருந்தும் தற்போது ஒரு இயந்திரமே இயங்கிவருகிறது. [153]

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலிப் பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

பருத்தித்துறை இலங்கை வங்கி ஊழியரான பீ. ராஜா என்பவரின் சைக்கிள், வங்கியிலுள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்திலிருந்து களவாடப்பட்டுள்ளது.

புலோலியிலுள்ள எஸ் ஆழ்வாப்பிள்ளை என்பவரின் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (52)

## சமூக சேவை திணைக்கள உதவிப் பணம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்தினால் உதவிப்பணம் பெறும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய உதவிப்பணத்தை தங்கள் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த இந்த உதவிப் பணம் பெறுபவர்கள் யாழ் செயலகத்திலுள்ள சமூக சேவைப் பகுதியில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ளலாமென்று யாழ். மாவட்ட உதவி சமூக சேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [153]

## புதிய நிர்வாகிகள்

(அச்சுவேலி)

கட்டுடை அரச வீதி மகா சனசமூக நிலையத்தின் புது வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்: அ. பரிஞானந்து, தலைவர்; பி. கருணாநிதி, உப-தலைவர்; வே டேவிற், செயலாளர்; வே. மகாலிங்கம் பொருளாளர்: தி. யேசுபாலன் ஏழுபேர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.


## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய $4\frac{1}{2}$ பரப்புக் காணியும் லேத் மெஷின்கள், தகடு வெட்டும் கட்டர் முதலியன விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள;

**பரஸ்கோ ஸ்தாபனம்,**

முத்திரைச் சந்தை, நல்லூர்.

(சி 4424)

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நாவல்களை தமிழில் இலக்கியத் தரம் குன்றாது மொழிபெயர்ப்புச் செய்வதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள். அலுவலகத்தில் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு அல்லது வீட்டில் இருந்து கொண்டே மொழிபெயர்ப்புச் செய்வதற்குத் தகுதியுடைய மொழிபெயர்ப்பாளர்கள் வேண்டப்படுகிறார்கள். சகல விபரங்களுடனும் இம்மாதம் 12ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4419,

C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

(C 4419)


## இராசி பலன்

06-03-1991

புதன்கிழமை

ஷஷ்டி பி. இ. 2-29 வரை. விசாகம் பி. இ. 12-56 வரை, சித்தாமிர்தயோகம், இராகுகாலம் பகல் 12-26 வரை, சுபநேரம் மாலை 3-54 முதல் 4-51 வரை.

மேடம்; தொழில் பாதிப்பு, பணக்கஷ்டம், குடும்பசச்சரவு.

இடபம்; வரக்குவன்மை, மாமியார் பாராட்டு, இனசன வருகை.

மிதுனம்: காரிய சித்தி, தொழில் லாபம், நண்பர்கள் உதவி.

கடகம்: பழைய பிரச்சனை, குடும்பப் பிரிவு, வாக்கு கலகம்.

சிங்கம்: வெறுப்பு, தொழில் பாதிப்பு, இனசன விரோதம், கவலை.

கன்னி: குடும்பசுகம், வாகன யோகம், தொழில் பாராட்டு.

துலாம்: பெண்வகை உதவி குடும்பக் கவலை, அதிகாரிகள் சினம்.

விருச்சிகம்: ஆலய தரிசனம், பண வரவு, குடும்ப மகிழ்ச்சி, புகழ்.

தனுசு: மனப்போராட்டம். தயாள சிந்தனை, புதிய திட்டம்.

மகரம்: கற்பனை மிகுதி, தொழில் குறைவு, குடும்பச் சந்தேகம்.

கும்பம்; ஏமாற்றம், வைத்தியச்செலவு, புத்திரர் கவலை, இனசனப் பகை

மீனம்: வாக்கு வன்மை, தொழில தகராறு, அவமதிப்பு, வெறுப்பு.

- ஜோஸ்யர்

## வடபகுதி விவசாயிகளுக்கு தானிய விதைகள்

[யாழ்ப்பாணம்]

வடபகுதி விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் உதவித்திட்டத்தின்கீழ் பயறு, கௌப்பி, மண்வெட்டி, உரம், பீற்றூட் விதைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் நலன்காக்கும் பிரிவினரின் அனுசரணையுடன் இருபாலைச் சந்திக்கு அருகாமையில் வைத்து இப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏனைய இடங்களிலும் மேற்கூறிய பொருட்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

முதலாம்கட்டம் பொருட்களே தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் தொடர்ச்சியாக இப்பொருட்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

## ஸ்ரீ வல்லிபுர ஆலயத்தில் பூந்தோட்டம் நூல் நிலையம் அமைக்க ஏற்பாடு

[பருத்தித்துறை]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கீதோபதேசம் செய்த பார்த்தசாரதியின் தேர்முகப்பை நுழைவாயிலாகக் கொண்ட நூல்நிலையம் ஒன்றும், பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமனை நடுநாயகமாகக் கொண்ட அழகிய பூந்தோட்டமொன்றும் அமைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் ஆலய புதிய வசந்த மண்டபம் பூர்த்தியாக்கல், தேர்மண்டபம் அமைத்தல், ஆலய சுற்றுப்புற மதிலும் பிரதான வாசல் வளைவும் அமைத்தல், இராஜகோபுர வாசல் மண்டபம் அமைத்தல், தீர்த்தக்கேணி வேலைகள் போன்ற திருப்பணி வேலைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான உற்சவங்களுக்கோ - திருப்பணிகளுக்கோ நிதி, பொருட்கள் சேகரிக்க வெளியார் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் ஆலய உற்சவங்களுக்கோ, திருப்பணிகளுக்கோ, நிதி உதவிகள், பொருட்கள் வழங்க விரும்புபவர்கள் ஆலய களஞ்சியத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவர் அறிவித்துள்ளார். (52)

## ஆசிரியர் கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகப் பகுதிக்குட்பட்ட விஞ்ஞான கணித ஆசிரியர் கழகத்தால் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான கணித ஆசிரியர்களுக்கு போறாட் நிறுவனத்தில் பாடசாலைகளில் செயற்திட்டங்களை மேற்கொள்ளுதல்" சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது.


## யாழ்ப்பாண மாநகரசபை எரிபொருள் விநியோக கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபைக்கு பின்வரும் அளவு எரிபொருட்களைக் கொள்கலனில் விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து 15-03-91 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

01. சாதாரண டீசல் - மாதாந்தம் 420 லீற்றர்

02. மண்ணெண்ணெய் - மாதாந்தம் 50 லீற்றர்

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை மோட்டார் வாகன தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-03-1991.

(ஏ 1128

★ 8-ம் திகதி மகளிர் தினம்!

# ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவோம்

## மகளிர் முன்னணி அறிக்கை

கடந்த எண்பது வருடங்களாக பங்குனி எட்டாம் திகதி, அடக்கப்படும் பெண் இனத்தின் உரிமைக்குரலை உயர்த்திச்சொல்லும் எழுச்சி மிகு நாளாக உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. எமது நாட்டில் அண்மைக்காலங்களில் தான் இத்தினத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு எதிர்வரும் 8ம் திகதி கொண்டாடப்படவுள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கையில்:

அந்தவகையில் காலாதிகாலமாக ஆணாதிக்க சமூகத்தின் அடக்குமுறைக்குள் அகப்பட்டு அல்லலுற்றுக்கொண்டிருப்பது மட்டும் அல்லாது இனவாத அரசின் இரும்புப் பிடிக்குள்ளும் இடர்பட்டு வதைபட்டுக்கொண்டிருக்கும் தமிழீழப் பெண்களின் எழுச்சியைக் காட்டும் நாளாக எதிர்வரும் பங்குனி எட்டாம் திகதி கொண்டாடப்பட இருக்கின்றது.

மூடக்கொள்கைகள் எமது பெண்களை மூச்சுத் திணற வைத்துக்கொண்டிருக்கிறது. சீதனம் இல்லையென்றால் திருமணத்தைப்பற்றி சிந்திக்க வேண்டாம் என சபிக்கப்பட்டு சாகும்வரை வேதனையுடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள் எமது பெண்கள். சாதிக் கொடுமையாலும்தான் சாகடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் இவர்கள். கல்வி பெண்களுக்கு அத்தியாவசியம் என்பதைக்கூட அறியமுடியாத நிலையில் இன்று பல பெண்கள் மூடக்கொள்கைகளாலும் அர்த்தமற்ற மரக் கோட்பாடுகளாலும், வேலைச் சுமைகளாலும் அமுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றால் மட்டுமல்லாமல் இன்னும் பல சமூகக் கொடுமைகளுக்குள்ளாகி தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

இத்தனையும் போதாதென்று இனவாத அரசின் அட்டூழியங்களால் அவல வாழ்வு வாழும் பெண்கள் எண்ணில்லாதோர் அரச இராணுவத்தால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு மனம் பாதிக்கப்பட்டு வாழும் பெண்கள் நிலைசொல்ல முடியாதுள்ளது. தென்தமிழீழத்தில் எமது பெண்கள் திசைதெரியாக்காட்டில் மறைந்தேனும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று நினைக்கும் முன்பே அவர்களை இழுத்துச் சென்று தம்காமப் பசியைத் தீர்த்துவிட்டு தடயமின்றியே அழித்துவிடுகின்றார்கள் சிங்கள இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல் படையினரும். சிங்கள, முஸ்லீம் காடையர்களால் கணவனும் பிள்ளைகளும் சித்திரவதைப்பட்டு கொல்லப்பட்டதை தம் கண்ணால் கண்டு மனம் பேதலித்துவிட்ட தென்தமிழீழப் பெண்களின் சோகங்கள் சொல்லும் தரமன்று.

இத்தனை கொடுமைகள் மட்டும் தான் எமது தமிழீழப் பெண்கள் அனுபவிப்பவை அல்ல. எண்ணில்லா ஒடுக்கு முறைக்குள் அகப்பட்டு. அவலபட்டு, அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எமது தமிழீழப் பெண்கள் பெண்ணினம் என்பதால் மட்டுமல்ல தமிழினப் பெண்கள் என்பதாலும் இன சமூக ஒடுக்குமுறை வடிவங்கள் அனைத்தாலும் எமது பெண்கள் தாங்கொணாக் கொடுமைகளைத் தினம் தினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாயகத்தின் மீட்புக்காகவும், பெண்ணினத்தின் விடிவிற்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு இணைந்து கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இறுதியில் தமிழினத்தைப் பிணித்துள்ள அடிமை விலங்கு மட்டுமல்லாமல் தமிழீழப் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அனைத்து அடக்கு முறைகளும் உடைத்தெறியப்படும்.

---

கட்டட இடிபாடுகள் பற்றிய

# மதிப்பீடு மேலிடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லை பகுதிக்குள் குவிந்து இருக்கும் கட்டட உடைவுகள், சிதைவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது; கட்டட உடைபாடுகள் மதிப்பீடு என்று தயாரிக்கப்பட்டு மேலிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் எரிபொருள் தட்டுப்பாடு; யாழ். மாநகர சபைக்கு ஏற்பட்ட சேதங்களினால் மாநகரசபை சொந்த நிதியிலிருந்து இவ்வேலையைச் செய்வதற்கு இயலாமலிருக்கின்றது.

புனருத்தாரணத்துக்கு நிதி தருவிக்கப்பட்ட பின்பு யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் உடைவுகள், சிதைவுகள் போன்றவை அகற்றப்படும் என்றார். (152)

---

# மருத்துவ பீட 3-ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மூன்றாவது எம். பி. பி. எஸ். பகுதி II பரீட்சை 1991 (ஜனவரி) முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளது.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தோர்விபரம்வருமாறு:

எஸ். அசோகன், எஸ். அசோக்குமார், பி ஜிப்ரா, எஸ். ஜீவாதரன். எஸ். ஜெயகுமார், ரி. ஜெககுமார், எஸ் கருணாகரன், ஆர். கேசவன் ரி. கேதீஸ்வரன், ரி. ஈ. மலர்கம், வி. நல்லநாதன், எஸ். நவநீதன், ரி. பேரானந்தராஜா, பி. பிரபாஹரன், கே. ராஜசேகரன், டி. ரஞ்சித் ஏ. சத்தியசீலன், பி. சிவநாத், எஸ். சிவநாதன், ரி. சிவசீலன் எஸ். சிவயோகன், எஸ். சுவேந்திரன், எஸ். சுதன், எம். தியாகராஜா, கே. உமாபதி சிவம், கே. உமாபதி, எஸ். ஏ. வின்சன்ட், செல்விகள் கி. அரியரத்தினம் ஏ. செல்லையா சி. வாமதேவன், டி. நவரத்தினம், எச். துரைசாமி, ஐ. விசாகப்பெருமாள். ஜே. ஜெயராசா, கே. சிவானந்தம், கே. துரைராஜா, எஸ். கனகலிங்கம், வை. நமசிவாயம், என். இராஜசேகரம், ஆர். தர்மலிங்கம், எஸ். இரத்தினசபாபதி, எஸ். சடாச்சரநாதன், எஸ். நாகேஸ்பரன், என். ஏ. செபமாலை, என். செல்லத்துரை, எஸ். கிறிரங்கநாதன், எஸ். எஸ். சபாநாதன், பி. சுமதி, ரி. பத்மநாதன், வி. வேலுப்பிள்ளை, எஸ். சிவநாயகி

மேற்படி பரீட்சையில் நூன சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

எஸ். செல். வரஞ்சன், ரி. கோணேஸ்வரன், செல்வி கி. நடராஜா, வி. ராஜசேகரன், கே. சிவகாந்தன் மேற்படி பரீட்சையில் மீள நூன சித்தியடைந்தவர் விபரம்: கே. அற்புதராஜா (சமூக மருத்துவம்) (153)

---

# ராஜீவை வேவு பார்த்த அதிகாரிகள் மீது விசாரணை

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராஜிவ்காந்தியின் இல்லத்தில் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த 2 உளவு அதிகாரிகள் வேவுபார்த்த சம்பவம் பற்றி விசாரிக்க அரசு ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்துள்ளது.

இச்சம்பவத்திற்கும் மத்திய அரசுக்கும் எதுவித தொடர்புமில்லையாயினும் இதுபற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் பிரதமர் திரு சந்திரசேகர் லோக்சபாவில் கேள்விநேரத்தின்போது பதிலளித்தார்.

இந்த உளவு வேலைகுறித்து இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் லோக்சபாவில் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். (பு)

---

★ ஈராக்கில் உள்நாட்டு குழப்பம்

# சதாம் ஹுசைனுக்கு காலக்கெடு; பதவி விலகுமாறும் எச்சரிக்கை

(பாக்தாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அடுத்த ஐந்து நாட்களுக்குள் பதவி விலகவேண்டும். இல்லாவிடில் அவரை கொலை செய்யப்போவதாக ஈராக்கில் 'இஸ்லாமிய புரட்சி சபை' கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கினுள் நிலைகொண்டுள்ள பன்னாட்டு படைகளுடன் இணைந்து இந்த புரட்சி சபை 'பாஸ்ரா' நகர் உட்பட தெற்கு ஈராக்கில் ஆறு நகரை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ளது.

அதிபர் ஹுசைனுக்கு எதிராக தற்போது நாடு முழுவதும் பாரிய அளவிலான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகிறது.

அதிபர் ஹுசைனுக்கு மிக நெருங்கிய உயர் அதிகாரிகள் பலர் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஒருவாரமாக நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்று வரும் ஆர்பாட்டங்களையடுத்து அதிபர் ஹுசைன் எங்குள்ளார் என்ற தகவல் எதுவும் தெரியவில்லையென ஈரான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. அதிபர் ஹுசைனின் உயிருக்கு எவ்வேளையிலும் ஆபத்து ஏற்படக்கூடிய சாத்தியமிருப்பதாகவும்ஈரான் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள், வன்முறை, தீவைப்புகள் குறித்த விபரமான 'சற்ரலைற்' படங்களை அமெரிக்க 'பென்டகன்' வெளியிட்டுள்ளது; இப்படங்கள் பல அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன், சவூதிஅரேபியப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு மேற்படி நாடுகளும்ஆதரவு தெரிவித்துள்ளன;

வளைகுடா யுத்தத்தில் பிடிக்கப்பட்ட 300 ஈராக்கியப் படை வீரர்களை நேற்றுப் பல்தேசப் படையினர் விடுதலை செய்தனர். இவர்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் பலர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாலஸ்தீனிய விவகாரம் தொடர்பாக விரைவில் நிலையான, நீதியான தீர்வொன்று காணப்படவேண்டுமெனப் பிரான்ஸ் அதிபர் கூறியுள்ளார். இது தொடர்பாக விரைவில் சர்வதேசரீதியான மாநாடொன்று கூட்டப்பட வேண்டுமென்றும் அவர் ஆலோசனை கூறியுள்ளார். (கி)

---

# ஈராக் பத்து கைதிகளை நேற்று விடுதலை செய்தது

(பக்தாத்)

ஈராக், தான் கைதிகளாகப் பிடித்துவைத்திருந்த நேசநாட்டுப் படை வீரர்களை நேற்று விடுதலை செய்தது;

நேற்று முன்தினம், நேசநாட்டுப் படைத் தளபதிகளுக்கும், ஈராக் நாட்டுப் படைத் தளபதிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், மேற்படி 10 வீரர்களையும் ஈராக் விடுதலை செய்து தனது நிலைப்பாட்டை உறுதிசெய்துள்ளது.

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் இக்கைதிகள் கையளிக்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 10 பேரில் 6 பேர் அமெரிக்கர், பேர் பிரிட்டிஷார்; ஒருவர் இத்தாலியர். இவர்கள் அனைவரும் இன்று ஜோர்தானுக்கு கொண்டுசெல்லப்பட்டு, அந்தந்த நாடுகளின் ஸ்தானிகர் காரியாலயங்களில் ஒப்படைக்கப்படுவர். (வி)

---

# தமிழ்தின விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். மத்திய கல்லூரியில் இம்மாதம் 8-ம் திகதி காலை தமிழ்தின விழா நடைபெற வருகிறது;

கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் இவ்விழா இடம்பெற இருக்கிறது;

இவ்விழாவில் கலாநிதி இ. பாலசுந்தரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (மா)

---

# புதிய அதிபர்

(கொழும்புத்துறை)

யாழ். பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்திற்கு புதிய அதிபராகத் திரு. என். சண்முகசுந்தரம் நியமனம் பெற்றுள்ளார். (154)

---

# குடிமனைகள் மேலே வானில் விமானங்கள் மோதிச்சிதறின

## 50 பயணிகள் கருகிப் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் இருவிமானங்கள் வானத்தில் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் அமெரிக்காவில் உள்ள சிக்காகோ மானிலத்தில் உள்நாட்டுச் சேவையில் ஈடுபட்டிருந்த இரு பிரயாணிகள் விமானங்கள் ஒன்றுடன்ஒன்று மோதி பொதுமக்கள் வாழும் பகுதியில் விழுந்து நொருங்கின.

மேற்படி விபத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும். பலவீடுகளும், கட்டடங்களும் சேதமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன. (வி)

# இராணுவ நடவடிக்கையினுல் கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தமிழ் ஊழியர்கள் பாதிப்பு

## 50 பேர் பற்றி தகவலில்லை

(நமது நிருபர் மு. ஈழத்தமிழ்மணி)

**கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தேடுதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினுல் ஆயிரத்திற்குமதிகமான தமிழ் அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

**இடம் பெயர்ந்து மீண்டும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கச்சென்ற ஐம்பதுக்கும் அதிகமான ஊழியர்கள் பற்றி இதுவரையும் தகவலில்லை.**

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட் டங்களிலுள்ள அரச திணைக் களங்களில் பணிபுரிந்த அரச ஊழியர்கள் ஜூன் மாதம் ஏற் பட்ட இராணுவ நடவடிக்கை யின் பின் ஏர் அப்பகுதிகளி லிருந்து இடம் பெயர்ந்தும், அகதிகளாகியும், சொந்த இடங்களுக்குச் சென்று இன்று வரையில் தத்தமது மாவட் டங்களிலுள்ள அரச திணைக் களத்தில் கடமைக்கு செல்ல முடியாத நிலையிலுள்ளனர். இவர்களுக்கு இதுவரையில் எதுவித சம்பளமும் வழங்கப் படவில்லை. இவர்களில் பலர் வீடு, சொத்துகள் போன்ற வற்றை இழந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் வாழ் கின்றனர்.

இதே சமயம் கிழக்கு மாகா ணத்தில் ஜூன் மாதத்திலி ருந்து இன்று வரையில் கட மைக்கு செல்லாத அரச ஊழி யர்கட்கு வேலை நீக்கக் கடி தங்கள் அரசாங்கத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

இவ் அரச ஊழியர் பாது காப்பற்ற நிலையில் மீளவும் அங்கு சென்று கடமையாற்ற முடியாத நிலையிலுள்ளனர்.

அரசாங்கத்தின் வேலைநீக்க எச்சரிக்கை கடிதத்தைத் தொடர்ந்து கிழக்கு மாகா ணம் திரும்பிய ஐம்பதிற்கும் அதிகமான அரச ஊழியர்கள் பற்றி இதுவரை எதுவித தக வலுமில்லை. [56]

## படகிலிருந்து ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நாகர்கோவில் கடலில் தரித்து நின்ற ஸ்ரீ லங்கா கடற்படையினரின் விசைப்படகிலிருந்து குடிமனை களை நோக்கி நேற்றுமுன் தினம் ஷெல் தாக்குதல் நடத் தப்பட்டது. [(வி)

## முரசுமோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வராவர்.

வேலுப்பிள்ளை சதாசிவம் (60வயது), தர்மலிங்கம் கமல வேணி (21 வயது), ஒரே குடும்பத்தைச் சேர்ந்த திரு மதி விஜயலக்ஷ்மி அமிர்தலிங் கம் (44 வயது), திருமதி பவ ளம் நாகலிங்கம் (63 வயது), அ. நிமிலன் (8 வயது) அ. சந்திரமோகன் ஆகியோர் காயமடைந்தனர்.

விஜயலக்ஷ்மி அமிர்தலிங்கத் தின் வீடு சேதமுற்றதுடன், 25 ஆடுகளும் இறந்துள்ளன. (56)

### கொழும்பில் இறந்தோரின் சடலங்கள்

## அடையாளம்காணமுடியாமல் சிதறிக் கிடந்தன

(கொழும்பு)

காலஞ்சென்ற பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சனின் சடலம் கருகிய நிலையில் காணப்பட்டதாகவும், இச்சட லத்தை யாரும் இனம் காண முடியாத நிலையில் இருந்ததா கவும் கொழும்பு பத்திரிகை யொன்றில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

காரில் பயணம்செய்த சாரதியினதும், கடற்படை அதிகாரியினதும், அமைச்சரி னதும் சடலங்களே முற்ருகக் கருகிய நிலையில் காணப்பட் டன என மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பின்போது சிக்குண்ட வாகனங்களில் பயணம் செய்தவர்களின் சட லங்கள் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் தலைவேரு கவும், உடல் வேருகவும் கைகால் வேருகவும் சிதறிக் கிடந்ததுடன் அடையாளம் காணமுடியாதவாறு சின்ன பின்னமாகக் கிடந்தன.

குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் அமைச்சரின் வீட்டுக்குமிடை யில் சுமார் ஒரு கிலோ மீட் டர் தூரம் இருக்கலாம். இந்த இடைவெளி தூரத்தை கணக் கிட்டே குண்டுவைக்கப்பட்டு வெடிக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது. குறுகிய சுற்று வட் டப் பொறியைப் பயன்படுத் தியே குண்டு வெடிக்க வைக் கப்பட்டதாக நம்பப்படுகி றது.

பாதுகாப்புப் படையின் கூற்றுப்படி நிறுத்தி வைக்கப் பட்ட கார் ஒன்றிலே குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்றும், இன்னெரு காரால் அமைச்சரின் காரை மோதியே குண்டு வெடிக்க செய்திருக்கலாம் எனவும் அதி காரிகள் தெரிவித்துள்ளனர். [எஸ்]

### பயிலுநர் ஆசிரியருக்கு

## தொலைக்கல்விமுறை பயிற்சி ஏப்ரலில் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி முறையிலான ஆசிரிய பயிற்சி ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப் படவுள்ளதென்று யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரி வித்தார்.

இந்நெறிக்கு யாழ் மாவட்ட ஆசிரியர்கள் மிகக்குறைந்த தொகையினரே இதுவரையில் மகரகம தேசியகல்விநிறுவனத் துக்கு விண்ணப்பித்துள்ளார் கள். விண்ணப்பிக்காத ஆசிரி யர்கள் உடனடியாக மகரகம தேசிய கல்வி நிறுவனத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிரதி யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவங் கள் கோட்டக்கல்வி அலுவ லங்களில் பார்வையிடலாம் என்றும் அவர் கூறினர். (152)

## வைத்தியசாலை ஊழியருக்கு சீருடை வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனு வைத்திய சாலை ஊழியர்களுக்கு வருடா வருடம் வழங்கப்பட்டுவரும் சீருடைகளுக்கான துணிகள் 90-91ம் ஆண்டுகளுக்கு வழங் கப்படவில்லை. கடந்த வரு டம் மார்ச் மாதத்திற்கு முன் னர் வழங்கவேண்டிய துணி களை அரசு காலம் தாழ்த்தி அனுப்பிவைத்ததால் ஜூன் மாதத்திலிருந்து ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் நிமித்தம் இச்சீருடைத் துணி கள் யாவும் அக்காலகட்டத் தில் வழங்கமுடியாமற்போய் விட்டது.

சுவஞ்சியசாலைப் பகுதிக்குள் விமானக் குண்டு வீச்சு இடம் பெற்றதால் மருந்து வகை களுடன் ஊழியர்களுக்கான துணிகள் யாவும் எரிந்து பழு தடைந்துவிட்டன.

இதேசமயம் இவ்வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னர் வழங்கவேண்டிய துணி வகை களையும் அரசு அனுப்பிவைக் குமா என்பதும் தெரியவில்லை. (56)

## ஷெல் வீச்சு

(பளை)

ஆனையிறவு இராணுவமுகா மிலிருந்து நேற்று முன்தினம் இயக்கச்சியை நோக்கி ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

### தகவல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

கொலையாளிகள் தொடர் பான தகவல்கள் இரகசிய மாகப் பாதுகாக்கப்படுமென் றும் அவர் தெரிவித்தார். [பூ]

### ஷெல் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேரி அஞ்சலா (30 வயது), என்றிசாத் (9 வயது), பிரேம லக்ஸ்மன் (13 வயது), பிரே மளா (15 வயது) ஆகியோர் இத்தாக்குதலினுல் காயமடை ந்த நிலையில் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (152. 153)

### பச்சைப் புலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை திருகோணமலை யில் தமிழர் வாழ்ந்த இடங் களில் தற்பொழுது சிங்களவர் களின் நடமாட்டம் அதிகரித் துக் காணப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் தொண்ணூறு வீதம் சிங்கள ஊழியர்கள் நியமிக்கப்பட் டுள்ளார்கள்.

தமிழர்களின் வீடுகளில் தற் பொழுது சிங்கள மக்கள் வசித்து வருகிருர்கள். பிற மாவட்டங்களிலிருந்து இது வரையும் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட சிங்களவர்கள் இம்மாவட்டத்தில் குடியேற் றப்பட்டுள்ளனர். (56)

## யாழ். குடாவில் நேற்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் ஒட்டுமடம் மானிப்பாய் வீதியைச்சேர்ந்த திருமதி மாணிக்கம் சின் னம்மா (70 வயது) என்ற வயோதிப மாது அதே இடத் தில் பலியாளுர். ஐந்து வீடு கள் சேதமடைந்தன. ஒன் பது பேர் காயமடைந்தார், கள் ஒட்டுமடம் எஸ். கெங்கா லட்சுமி (வயது 40), சாந்த லட்சுமி (வயது 23), ஒட்டு மடம் நாகேஸ்வரி (வயது 45) வண்ணை ஐயஞர் கோவில டியைச் சேர்ந்த சண்முகேஸ் வரன் (வயது 29), மனே கரன் (வயது 13) ஒட்டுமடம், 13) ஆனந்தி (வயது 16), ஏ. மூர்த்தி, 137 வயது) ஏ. இராசா (18 வயது) மதிவ தணி (வயது 15) ஆகியோரே காயமடைந்தவராவார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோயி லுக்கு அருகாமையில் காலை 9-15 மணியளவில் பொம்மர் கள் இருகுண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தின.

இச்சம்பவத்தில் நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த கந்தையா இராசம்மா (வயது 69) என்னும் பெண்மணி தெருவில் விழுந்த குண்டி ஞல் பாதிக்கப்பட்டு ஸ்தலத் திலே பலியானுர்.

ஏழு வீடுகள் பலத்த சேத மடைந்துள்ளன. எஸ். கன கேந்திரன், எம். கனகரத்தி னம், கா. சி. குருநாதன் செ. வாணிஸ்வரன் ஆகியோ ரின் வீடுகள் பொம்மரிலிருந்து வீசப்பட்ட முதல் குண்டு தாக்குதல்களினுல் பலத்த சேதமடைந்துள்ளன.

இரண்டாவது குண்டுத் தாக்குதலில் வி. பி. சுந்தர லிங்கம், எஸ். சண்முகராஜா நல்லூர் அகதிகள் முகாம், எஸ் காசிலிங்கம் ஆகியோ ரின் வீடுகள் சேதமடைந்துள் ளன.

பிற்பகல் 2-00 மணியள வில் யாழ் கலட்டிப் பகுதியில் நடைபெற்ற விமானக்குண்டு வீச்சினுல் யாழ். வீதியைச் சேர்ந்த தம்பிராஜா (வயது 60) என்பவர் பலியானுர். யாழ். பொன்னம்பலமான் வீதி யைச் சேர்ந்த எஸ். இரா யப்பா (43 வயது) எம். விஜ யரத்தினம் (46 வயது) ஆகி யோர் காயமடைந்தனர். (56-152-153)

### நெல்லியடியில்

(புலோலி)

நெல்லியடிப் பகுதியில் நேற்று பிற்பகல் 1-30 மணி யளவில் இருபொம்மர் விமா னங்கள் நடத்திய தாக்குத லில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நெல்லியடி, கரவெட்டி விக் கினேஸ்வராக்கல்லூரி வீதியில் உள்ள திருமதி பொன்னம்மா. திரு இராசக்கோன் ஆகி யோருடைய வீடுகள் மீதும் மற்ருெரு வீடுமீதும் இவ்விரு பொம்மர் விமானங்களும் மூன்று குண்டுகளை அடுத் தடுத்து வீசின. (61)

### அச்சுவேலியில்

(அச்சுவேலி)

அச்சுவேலி தம்பாலையில் நடத்தப்பட்ட குண்டு வீச்சி ஞல் பல வீடுகள் சேதமடைந் தன. இருவர் படுகாயமடைந் தனர்.

நேற்றுக் காலையில் அச்சு வேலி தம்பாலையில் பொம்பர் கள் வீசிய குண்டினுல் செ. சோதிலிங்கம், திருமதி ஞா. வனிதா ஆகியோரின் வீடுகள் பலத்த சேதமடைந்தன.

விரிவுரையாளர் கே. சித்திர வடிவேல், கே. கந்தையா, மு சந்திரலிங்கம் ஆகியோ ரின் வீடுகளுட்படப் பல வீடு களின் கூரைகள் சேதமடைந் தன.

அகதியாக இடம்பெயர்ந்து தம்பாலையில் வசித்துவந்த செ. தம்பிராசா (வயது 50) படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருமதி குண்டுமணி உட்பட வேறும் பலர் படுகாயமடைந் தனர். (56, 74, 152, 153)

### இராணுவத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுவருகிறது.

இதனுல் கொழும்பில் தங்கி யிருக்கும் தமிழ் இளைஞர்கள் வெளியில் நடமாட முடியாத விடுதிகளில் அடைபட்டுக் கிடப்பதாகத் தெரியவரு கிறது. [எஸ்]

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யான தாக்குதலினுல் பின் வாங்கி முகாம் திரும்பினர் கள்.

நேற்றுக்காலை 10 30 மணி யளவில் சின்னமுளாய், சரு வில். சரம்பன் ஆகிய காவல ரண்களிலிருந்து வெளியேறிய படையினரை இடைமறித்து தாக்குதல் நடத்தினர்கள்.

இம்முகாமிலிருந்து வெளி யேறிய இராணுவத்தினர் களில் ஒருவர் புலிகளின் மிதி வெடியில் சிக்கிதனது ஒரு காலை இழந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. (வி)

### காரைநகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 9-30 மணியளவில் இக்கடற் பகுதியில் 'வீரசூரையா' கப் பல் நங்கூரமிட்டிருந்தது.

இக்கப்பல் நிற்கும்போது கடற்படை முகாமிலிருந்து இருவிசைப் படகுகள் கப்பலை நோக்கி விரைந்து சென்றன.

காலை 10-00 மணிவரை வீரசூரையா கப்பல் சென்ற பின்னர் நயினதீவு கடற் படைமுகாமிலிருந்து ஒரு பீரங்கிப்படகு காரைநகரை நோக்கி சென்றது. (வி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.